# ?????????? ??????? ???? ??????????????
# ????????- ?????????????



முல்லைத்தீவில் பௌத்த பிக்குகளால் அரங்கேற்றப்பட்டது இனப்படுகொலைக்கான அறிகுறியாகும் என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் இன்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற மக்கள் போராட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “நீராவியடி பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்தக் கேணிக்கு அருகில், நீதிமன்ற உத்தரவையும் புறந்தள்ளி பௌத்த பிக்கு ஒருவரின் உடல் நேற்று தகனம் செய்யப்பட்டமை பேருந்துகளில் கொண்டு வரப்பட்ட சிங்கள காடையர்களினால் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் முன்னிலையில் சட்டத்தரணிகள் மற்றும் பொதுமக்கள் தாக்கப்பட்டமை ஆகியன எதிர்காலத்தில் வடக்கு கிழக்கில் மீண்டும் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெறக்கூடிய இனப்படுகொலைக்கான ஒரு அறிகுறி என்பதை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளவேண்டும்.

முல்லைத்தீவு – பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தை ஆக்கிரமித்து விகாரை அமைத்துத் தங்கியிருந்த கொலம்ப மேதாலங்க தேரரின் இறுதி நிகழ்வுகள் ஏற்கனவே பெரும் பதற்றத்தை இந்தப் பகுதியில் ஏற்படுத்தி இருந்த நிலையில், சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான போதிய கால அவகாசம் அரசுக்கு இருந்தது.

வடமாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி நிலமையை விபரித்து சட்ட ஒழுங்குகளுக்குப் பங்கம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுமாறு கேட்டிருந்தேன்.

ஆனாலும் ஒரு அரசியல் கட்சி பேருந்து வண்டிகளில் நாலாபுறத்தில் இருந்தும் சிங்களக் காடையர்களைக் கொண்டுவந்து அட்டூழியத்தில் ஈடுபடுவதற்கும் தனது நூற்றுக்கணக்கான படையினர் பார்த்துக்கொண்டு எந்த நடவடிக்கைகளையும் எடுக்காமல் வேடிக்கை பார்ப்பதற்கும் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்ட ஒழுங்கைக் காப்பாற்ற உரிய நடவடிக்கைகளை எடுக்காமல் இருப்பதற்கும் அரசு அனுமதித்தமை வெறும் தற்செயலான ஒரு நிகழ்வு அல்ல. இவை யாவும் மேலிட அனுசரணைகளுடன் தான் நடைபெற்றுள்ளன.

தமிழ் மக்கள் தமது வடக்கு கிழக்கு தாயகத்தில் சுய நிர்ணய உரிமைகளுடன் வாழ்வதற்கான ஏற்பாடு ஒன்றை இந்தியா மற்றும் சர்வதேச சமூகம் காலதாமதம் இன்றி செய்வதற்கான தருணம் வந்துவிட்டது என்பதை நேற்று முல்லைத்தீவில் நடைபெற்ற நிகழ்வு எடுத்துக் காட்டுகின்றது.

அதேவேளை, முல்லைத்தீவில் நேற்று நடைபெற்ற சம்பவம் ஒட்டுமொத்த தமிழ் மக்கள் மத்தியிலும் ஆறாத காயம் ஒன்றை ஏற்படுத்திவிட்டது. நேற்று நடைபெற்ற சம்பவங்களுக்கு காரணமானவர்கள் உடனடியாக கைதுசெய்யப்பட்டு சட்டத்தின் முன்பாக நிறுத்தப்படவேண்டும்.

இல்லையென்றால், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தகுந்த பாடம் ஒன்றை வழங்குவதற்கு தமிழ் மக்கள் தருணம் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்” என கூறினார்.

---

# ??????????????? ??????? ???????????? ????????? ??????????????



நீராவியடி பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்தக் கேணிக்கு அருகில் நீதிமன்ற உத்தரவை மீறி பௌத்த தேரரின் உடலம் அடக்கம் செய்யப்பட்டமையை கண்டித்தும் சட்டத்தரணிகள் மற்றும் தமிழ் மக்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமையை கண்டித்தும் முல்லைத்தீவில் இன்று மாபெரும் கண்டன ஆரப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

நேற்றைய தினம் குறித்த ஆலயப்பகுதியில் தேரரின் உடல் அடக்கம்செய்ய முற்பட்டவேளையில் அதனை தடுக்க சென்றிருந்த தமிழ் மக்கள் மீதும் நீதிமன்ற உத்தரவை மீறுகிறீர்கள் என எடுத்துரைக்கெ சென்ற சட்டத்தரணிகள் மீதும் பௌத்த பிக்குகள் பொலிஸார் முன்னிலையில் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர்.



இந்நிலையிலேயே பௌத்த பிக்குகளின் குறித்த அடவடியான செயலிற்கு எதிராக முல்லைத்தீவில் இன்று பெருமளவில் திரண்ட மக்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீதிமன்றின் கட்டளையை அவமதித்தவர்கள் அதற்குத் துணைநின்ற பொலிஸாரை நீதியின் முன் நிறுத்தவேண்டுமென வலியுறுத்தி மேற்படி கண்டன ஆர்பாட்டம் இடம்பெற்றது.

இதேவேளை குறித்த சம்பவத்தினை கண்டித்து வடக்கு மாகாண சட்டத்தரணிகளும் பணிப்பகிஸ்கரிப்பில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.





